**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**

முன்னிலை- **திரு.M.முருகன், M.L.,**

**சார்பு நீதிபதி, திருவாரூர்.**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04-ம் நாள் வியாழன் கிழமை.

(திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், ஆவணித்திங்கள் 19 ஆம் நாள்)

**அசல் வழக்கு எண்.9/2025**

**(CNR.NO.TNTV03-000699-2024)**

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் டவுன் மற்றும் முன்சிபி, காணியாளர் தெரு, எண்.3B/2, முன்னாள் ராணுவ வீரராக பணிபுரிந்து தற்போது கால்நடை மருத்துவத்துறையில் உதவியாளராக பணி புரிந்து வரும் N.செல்லப்பா, குமாரர், இந்து, 57 வயதுள்ள S.வெற்றிவேலன்.

... வாதி.

- எதிர்-

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் டவுன் மற்றும் முன்சிபி, காட்டுக்காரத்தெரு, எண்.61/10, என்ற முகவரியில் பணிபுரிந்து நேதாஜி ரோடு, கால்நடை வளர்ப்பு கால்நடை மருத்துவத்துறையில் பணிபுரிந்து வரும் A.T.பாரதசெல்வன் மனைவி இந்து, வாணி.

... பிரதிவாதி.

- - -

தாவா தொகை ரூ.700000/--யும், மேற்படி தொகைக்கு தாவா தாக்கலான தேதியிலிருந்து தொகை முழுவதும் செல்லாகும் வரை 6% ஆண்டு பின்வட்டியும் மற்றும் தாவா செலவுத் தொகையும் வாதிக்கு, பிரதிவாதியால் கிடைக்கும்படி, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி வாதியால் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் 28.11.2024

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் 22.01.2025

வழக்குமூலம் 26.05.2022, 13.06.2022, 23.09.2024 ஆகிய தேதிகளில் திருவாரூரில் வழக்கு உற்பத்தி.

வழக்கு தொகையான ரூ.7,00,000/-க்கு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 22-ன் படி நீதிமன்றக்கட்டணமாக ரூ.21,000/- செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இறுதியாக கடந்த 08.08.2025-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சதாசிவம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மாரிமுத்து மற்றும் ஒருவர் ஆஜராகியிருந்த போதும் எதிருரை தாக்கல் செய்யாததாலும், அழைப்பாணை பெற்றுக்கொண்ட பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்த போது ஆஜராகததாலும், அவருக்காக யாரும் முன்னிலையாகததாலும் கடந்த 23.04.2025 ஆம் தேதி இத்தாவாவில் ஒருதலைபட்ச உத்தரவுக்கு உள்ளாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சிய,

சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இவ்வழக்கில் இன்றே இந்நீதிமன்றம் இறுதியாக கீழ்கண்டவாறு வழங்கும்.

....

**தீர்ப்பாணை**

1. இவ்வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகை ரூ.700000/-க்கு தாவா தாக்கலான தேதியிலிருந்து, தொகை முழுவதும் செல்லாகும் வரை 6% ஆண்டு வட்டியும் மற்றும் தாவா செலவுத் தொகையையும் செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பாணை கட்டளை பிறப்பிக்கிறது.

3. வாதி தரப்பு வழக்கு செலவுத் தொகையான ரூ.31665/-ஐ பிரதிவாதி, வாதிக்கு வழங்க வேண்டும்.

**செலவுத்தொகை பட்டியல் விபரம்**

| வாதி தரப்பு | Rs. P. | பிரதிவாதி தரப்பு |
|---|---|---|
| வழக்குரையில் நீ.ம.க. | 21000.00 | செலவுத்தொகைப்பட்டியல் தாக்கல் இல்லை. |
| வக்காலத்து | 10.00 | |
| படி மெமோ | 4.50 | |
| தட்டச்சு செலவு | 100.00 | |
| வழக்கறிஞர் முன் அறிவிப்பு | 1000.00 | |
| வழக்கறிஞர் ஊதியம் | 9550.00 | |
| **மொத்தம்** | **31664.50** | |
| **முழுமையாக்கப் பட்ட தொகை** | **31665.00** | |

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ஆம் நாளில் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிடப்பட்டு வழங்கப்பட்டது.

MURUGAN M
Digitally signed by MURUGAN M
Date: 2025.09.17 14:57:00 +0530

சார்பு நீதிபதி,
திருவாரூர்.